[1981 பிப்ரவரி 9

காளிங்கராயன் வாய்க்கால்

*வினா எண். 254— திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் காளிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் கடைமடைப் பகுதி நிலங்களுக்கு தண்ணீர் சரிவரக் கிடைக்காமல் அப்பகுதி விவசாயிகள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) நீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க அந்தக் கால் வாயைச் செப்பனிடும் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா ?

(இ) அதற்காக ஏதாவது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஈ) ஆம் எனில் அப்டனி எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) காளிங்கராயன் வாய்க்கால் கடைமடைப் பகுதி நிலங்களுக்கு தண்ணீர் சரிவர கிடைக்காததால் அரசு இவ்வாய்க்கால் சீரமைக்கும் பணிக்கு ரூ. 66 இலட்சம் செலவிட ஒப்புதல் அளித்தது. இதைத் தொடர்ந்து ஆயக்கட்டுக்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மதகுகளை சீரமைத் தல் ஆகிய பணிகள் தவிர அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டு விட்டன. இப்பணிகள் அனைத்தும் முடிந்தவுடன் கடைமடைப் பகுதிகளுக்கு சீராகத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தற்போது இந்தக் கால்வாயில் மதகுகள் சரியாக இல்லாததன் காரணமாக தண்ணீர் வீணாகும் நிலைமை இருக்கிறது. ஆகவே, மதகுகளைச் சீர் செய்து கடைமடைப் பகுதி வரை தண்ணீர் கொடுக்க அரசு திட்டம் வைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நான் என்னுடைய பதிலில் 'ஆயக்கட்டுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மதகுகளைச் சீரமைத்தல் ஆகிய பணிகள் தவிர அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டுவிட்டன என்று தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி மதகுகளைச் சீரமைக்கும் பணியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் முடிக்கப் பெறும்.

[1981 பிப்ரவரி 9]

திரு. கு. ரமணி : காளிங்கராயன் வாய்க்கால் அருகே இருக்கக் கூடிய பவானி காவிரியாற்றில் சங்கமமாகக் கூடியதற்குப் பக்கத்தில் இருக்கிறது. அந்த வாய்க்காலைச் செப்பனிட்டு விட்டால் மட்டும் கடை மடைப் பகுதிக்கு தண்ணீர் அளித்துவிட முடியாது. தண்ணீர் ஜாஸ்தி ஆகிவிடாது. தண்ணீர் வெளியிலே போவதை வேண்டுமானால் தடுக்கலாம்.

தண்ணீர் வருவதற்காக நீண்டகாலத்திற்கு முன்னதாகவே அமைக்கப்பட்ட அந்த காளிங்கராயன் என்ற ஊரிலே இருக்கின்ற அந்த அணையை உயர்த்துவதற்கும் இந்த நேரத்திலே அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அந்த வாய்க்காலிலே அதிகமாக வண்டல் மேடிட்டு இருந்தது, கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் போகாததற்கு ஒரு காரணம் புல்டோசர்கள் மூலமாக அந்த வண்டல் எல்லாம் முழுவதும் அகற்றப்பட்டு விட்டது. வாய்க்காலில் உடைப்பு ஏற்படக்கூடிய சில முக்கியமான இடங்களிலே பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்படுகின்றன. இருக்கின்ற மதகுகளை ஒழுங்குபடுத்தி, மேடுகளை அகற்றினாலே அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்துக்களைத் தனியாக கேள்வி கேட்பதன் மூலம் தெரிவித்தால் அந்த அணையை உயர்த்துவது பற்றி நான் பதில் சொல்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தக் கால்வாயிலே நீண்ட நாட்களாகத் தண்ணீர் ஓடுவதால் நீர்த் தாவரங்களும், கழிவுகளும் வளர்ந்து நீர் ஒழுங்காகச் செல்லமுடியாமல் கால்வாயின் கரைமேல் வழிந்து சென்று தண்ணீர் வீணாவது மட்டுமல்லாமல் தண்ணீர் கரைமேல் செல்கின்ற நிலைமை ஏற்படுவதால் கரைகள் சேதமடைகின்றன. ஆகவே, கால்வாயைச் சேதமடையாமல் பார்த்துக் கொள்கின்ற வகையில் கரைக் காவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதைப் பற்றி என்னிடம் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

சிற்றாறு-பட்டணங்கால் கால்வாய் பாசனம்

*வினா எண் 255.—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சிற்றாறு-பட்டணங்கால் கால்வாய் திட்டத்தில் அணையில் நிரம்பத் தண்ணீர் இருந்தும் பல வருடங்களாக கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் ஒழுங்காகச் செல்லாதிருப்பதை அரசு அறியுமா?